**செ. கு. எண்: 82** **நாள்: 30.05.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்களின்**

**அறிக்கை – 31.05.2018**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், ச. கண்ணனூர் மேற்கு கிராமம், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் மசினி என்ற யானையினை பராமரித்து வந்த மண்ணச்சநல்லூர் வட்டம், மாகாளிகுடி கிராமத்தைச் சேர்ந்த யானைப்பாகன் திரு. கஜேந்திரன் என்பவர் 25.5.2018 அன்று, திருக்கோயில் யானை தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

திருக்கோயில் யானை தாக்கியதில் உயிரிழந்த யானைப்பாகன் திரு. கஜேந்திரன் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. கஜேந்திரன் அவர்களின் குடும்பத்திற்கு ஐந்து லட்சம் ரூபாய் திருக்கோயில் நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**